TAMIL NADU LEGISLATURE LIBRARY
25 NOV 1982
MADRAS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1982 மார்ச் 24.

பங்குனி 11, துன்மதி—திருவள்ளுவர் 2013.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவைக் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—

'' பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின். ''

மயிலிறகு ஏற்றிய வண்டியே ஆனாலும், அந்தப் பண்டமும் (அளவோடு ஏற்றாமல்) அளவு கடந்து மிகுதியாக ஏற்றப்படு மானால், அந்த வண்டியின் அச்சு முறிந்து விடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 625, 626, 627 ஆகியவை கடைசியில் எடுத்துக் கொள்ளப்பெறும்.

சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

வேளச்சேரி பகுதியில் வாழும் மக்களுக்கு குடிமனைப் பட்டா வழங்கும் திட்டம்.

***வினா எண். 628—திரு. பம்மல் நல்லதம்பி :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி கக்கன் நகர், பெரியார் நகர், நேரு நகர் வாழ் மக்களுக்கு குடிமனைப்பட்டா வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) : கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள் '' பெரிய ஏரி '' என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் மழைக்காலங்களில் இரண்டு அடி முதல் மூன்று அடி வரை தண்ணீர்

தேங்கும். தண்ணீர் தேக்க அளவினைக் குறைப்பதற்கான முன் மொழிவு, சம்பந்தப்பட்ட துறைகளின் பரிசீலனையில் உள்ளது. அது முடிந்த பிறகே குடிமனைப்பட்டா வழங்குவது பற்றி நடவடிக்கை எடுக்க இயலும்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, தண்ணீரைக் குறைத்ததற்குப் பிறகே, பட்டா வழங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குறிப்பிட்ட காலங்களில் தான் அங்கே தண்ணீர் நிற்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. கிட்டத் தட்ட ஆறாண்டுக் காலம் இப்படிப்பட்ட நிலை இருந்து கொண்டிருக்கிறது. கலெக்டர், தாசில்தாரை வைத்துப் பார்த்தார்கள். ஆனால், இன்றுவரை ஒருவிதமான நடவடிக்கையும் எடுக்கப் படாமல் இருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு முடிவிற்குள்ளாவது தற்போதைய நிலையை நீக்கி அவர்களுக்குப் பட்டா கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : குறிப்பிட்ட காலத்தில் தான் தண்ணீர் பிடிப்பு என்பது உண்மை. அந்தக் குறிப்பிட்ட காலத்தில் தண்ணீர் பிடிக்கிறபோது 2 அடியிலிருந்து மூன்று அடி வரை தண்ணீர் இருக்கிறது. இப்படியிருக்கும் போது வீடு கட்டமுடியாது என்பதை உறுப்பினர் அவர்கள் உணர்வார்கள் என்று நான் கருதுகிறேன். அது பெரிய ஏரி. அது பெரிய ஏரி என்பதால் தண்ணீர் குறைந்துவிட்டால் அந்த ஏரி சம்பந்தப்பட்ட ஆயக்கட்டுகள் பாதிக்கப்படுமா என்பதையும் யோசிக்கவேண்டியிருக்கிறது. பட்டா கொடுத்து விட்டால் உடனடியாக ஆயக்கட்டுகள் பாதிக்கும்போது உச்சநீதிமன்றம் வரை செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது இன்றைய சட்டதிட்டங்கள்படி, ஆகவே இவைகளை எல்லாம் வகைப்படுத்திச் ஒழுங்காகச் செய்யவேண்டும் என்பதில் அரசு தீவிர முயற்சி எடுத்துக்கொள்கிறது. விரைவில் இதற்கு ஆவன செய்யப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : நீர்குறைந்த பின்பு குடியிருப்பு மனைப்பட்டா கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதுபோல் மீண்டும் மழைக்காலங்களில் மழை பெய்து நீர் அதிகமாக வந்தால் குடியிருப்பு வசதி ஏற்படுமா? ஆகவே அதற்குப் பதிலாக வெறு இடங்களுக்கு மாற்றிக்கொடுக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு. திரு. எஸ் டி. சோமசுந்தரம் : வேறு இடத்திற்கு மாற்றிக் கொடுப்பதற்கு சென்னைக்கு அருகாமையில் இடம் இல்லை என்பது உறுப்பினர்களுக்கு தெரியும். மழைக் காலங்களில் தண்ணீர் தேக்க அளவினைக் குறைத்து பட்டா கொடுக்க அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

1982 மார்ச் 24]

திரு. து. இராசரத்தினம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்தில் மண்ணை நிரப்பிய பின்னர் பட்டா கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். இதுவரை மண்ணை நிரப்புவதற்கு, 2 ,3, அடிகள் உயரும் அளவிற்கு ஏதாவது திட்டங்கள் உண்டா? அப்படியில்லையென்றால, அவர்களுக்கு பட்டா கொடுத்து விட்டால் அவர்கள் மண்ணை நிரப்பி அதன் மூலம் வாழ்க்கை நடத்த அது ஏதுவாக அமையாதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மண்ணை நிரப்புகிற என்ற வார்த்தையையே நான் சொல்லவில்லை. மண்ணை நிரப்புவது என்பது வேறு, தண்ணீர் பிடிக்காமல் வழிவகை செய்வது என்பது வேறு. மண்ணை நிரப்பவே முடியாது அங்கே. அந்த இடத்தைநான் அதிகாரிகளோடு பார்த்து விட்டு வந்திருக்கிறேன். அங்கேமண்ணைப் போட்டு நிரப்பவே முடியாது. தண்ணீர் பிடிக்காமல் அதற்கு போக்கிடம் ஏற்படுத்த முடியுமா என்பதை அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு முதல் உதவி பயிற்சியை கட்டாயமாக போதிக்கும் திட்டம்.

*வினா எண் 629—வேடசந்தூர்வி. திரு. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள பள்ளிகள், கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு முதல் உதவி பயிற்சியை கட்டாயமாக போதிக்க அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 4, 5, 7 வகுப்புகளில் அறிவியல் பாடத் திட்டத்தின் கீழ் முதலுதவியைப் பற்றிக் கற்றுத் தரப்படுகிறது. மேலும் மாணவர்களின் உபயோகத்திற்கென முதலுதவிப் பொருள்களும் மருந்துகளும் அடங்கிய முதலுதவிப் பெட்டி வைத்தல், ஒவ்வொரு வகுப்புக்கும் முதலுதவிக்கென முதலுதவிபெட்டி வைத்திருத்தல், முதலுதவி அவ்வப்போது செய்ததைக் குறித்து ஒரு குறிப்புப் புத்தகம் வைத்திருத்தல் ஆகியவற்றில் 7 ஆம் வகுப்பிலேயே பயிற்றுவிக்கப்படுகிறது. எட்டாம் வகுப்பு ஆங்கிலப் பாட நூலிலும் முதலுதவி பற்றிய பாடம் ஒன்று உள்ளது. முதலுதவியைப் பற்றி இவ்வாறு கீழ் வகுப்புகளிலேயே நன்கு தெரிந்து கொள்ள வகை செய்யப்பட்டுள்ளதால் பள்ளிகளில் உயர் வகுப்புகளிலும் கல்லூரிகளிலும் முதல் உதவிப் பயிற்சியைக் கட்டாயமாகப் போதிப்பது தேவை யெனக் கருதப்படவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
VAIMAYE VELLUM
TRUTH ALONE TRIUMPHS